**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை – ஈரோடு மாவட்டம்**

**அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம் – ஈப்பு ஓட்டுநர் காலிப்பணியிடம் அறிவிக்கை**

ஈரோடு மாவட்டம் அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஈப்பு ஓட்டுநர் நிலையில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தினை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | பதவியின் பெயர் | ஈப்பு ஓட்டுநர் |
| 2 | மொத்த காலி பணியிடங்கள் | 1 |
| 3 | ஊதியம் | ரூ.19500-71900 என்ற ஊதிய அட்டவணையில் அரசு நிர்ணம் செய்த இதர படிகளுடன்(Level-8) |
| 4 | இனச்சுழற்சி எண் மற்றும் இடஒதுக்கீடு விவரங்கள் | **இனசுழற்சி விவரம்**: பட்டியலினத்தவர் அருந்ததியர் (பொது)<br>**முன்னுரிமை பெற்றவர்/ முன்னுரிமை அற்றவர்**: முன்னுரிமை அற்றவர் |
| 5 | வயது வரம்பு | **பிரிவு**: SCA(G)<br>**குறைந்தபட்ச வயது வரம்பு 01.07.2025-ன்படி**: 18<br>**நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அதிகபட்ச வயது வரம்பு 01.07.2025-ன்படி**: 37 |
| 6 | கல்வித்தகுதி | 8-ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 7 | இதரத்தகுதிகள் | 1. செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.<br>2. ஓட்டுநர் நிலையில் 5 ஆண்டுகளுக்கு குறையாமல் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |
| 8 | விண்ணப்ப படிவம் | விண்ணப்பம் படிவம் https://erode.nic.in என்ற இணையதள முகவரியில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 9 | விண்ணப்ப காலம் | 22.01.2026 முதல் 06.02.2026 வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை |
| 10 | விண்ணப்பிக்க கடைசி நாள் | 06.02.2026 மாலை 5.45 மணி |
| 11 | விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி | ஆணையாளர்,<br>ஊராட்சி ஒன்றியம், அம்மாபேட்டை, ஈரோடு மாவட்டம்.<br>பின்கோடு – 638 311. |

| | | |
|---|---|---|
| 12 | விண்ணப்பக் கட்டணம் | ரூ.50/- Commissioner, Panchayat Union, Ammapettai என்ற பெயரில் ரூ.50/-க்கான வங்கி வரைவினை(DD) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். |

**நிபந்தனைகள்**

1. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் https://erode.nic.in என்ற இணையதள முகவரியில் இருந்து விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து, அனைத்து கலங்களையும் முழுமையாக பூர்த்தி செய்து, கல்வித்தகுதி, சாதிச்சான்று, ஓட்டுநர் உரிமம், முன் அனுபவச் சான்று உள்ளிட்ட அனைத்து சான்றிதழ்களின் சுய சான்றொப்பம் இட்ட நகல்களை இணைத்து முன் குறிப்பிட்ட விண்ணப்ப காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
2. நிர்ணயிக்கப்பட்ட இனசுழற்சி, வயது மற்றும் கல்வித்தகுதியுள்ள நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும்.
3. தகுதியில்லாத விண்ணப்பங்கள் மற்றும் காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. அரசு விதிகளின்படி முன்குறிப்பிட்ட இனச்சுழற்சி மற்றும் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் நியமனம் மேற்கொள்ளப்படும்.

தகுதியுள்ள விண்ணப்பத்தாரர்களுக்கு நேர்காணல் நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்த தகவல் பதிவஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம், அம்மாபேட்டை.